**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.4/2016**

**பி.வா.சா. –3– சின்னகாளியப்பன்**

**நாள். 20.06.2025**

**பி.வா.சா.3 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். 2 ஆம் பிரதிவாதி கருப்பாயி என்ற கலையரசி கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் வழங்க வந்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதி பற்றி தெரியுமா என்றால் சுரேஷ் என்பவர் தனது அத்தை கலையரசி என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கானது இட சம்பந்தமாக போட்டுள்ளார்கள் என்பது தெரியும், என்ன பரிகாரம் கோரியுள்ளார்கள் என்ற விபரம் தெரியாது. எனது சொந்த ஊர் பொம்முலு கவுண்டன் புதூர், அய்யர் மடம் ஆகும். மேற்படி அய்யர் மடத்தில் எனக்கு சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் உள்ள விபரங்கள் அனைத்தும் 2 ஆம் பிரதிவாதி கலையரசி சொல்லி தான் எழுதப்பட்டது என்றால் சரிதான். அய்யர்மடத்தை தவிர வேறு எங்கும் சொத்து உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் நான் டிராக்டர் வைத்துள்ளதாக சொல்லி அதற்கான பதிவு எண்ணை எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு சொந்தமாக டிராக்டர் உள்ளதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆறுமுகத்தின் தந்தை பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆறுமுகத்திற்கு எத்தனை மனைவி என்ற விபரம் தெரியுமா என்றால் ஒரு மனைவி அவர் பெயர் மீனாட்சி. ஆறுமுகத்தின் மகள் கலையரசி மற்றும் பேத்தி பிரியா ஆகியோரை தெரியும். நான் தாக்கல் செய்த முதல் விசாரணையில் ஆறுமுகமும், அழகியகவுண்டரும் பாகம் பிரித்துக்கொண்ட விபரம் தெரியும், எந்த வருடம் என்பது தெரியாது. மேற்படி பாகப்பிரிவினை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த முதல் விசாரணையில் ஆறுமுகம் தனது மகள் பிள்ளை பேத்தியான பானுபிரியா என்பவருக்கு உயில் எழுதி வைத்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி உயில் சாசனத்தை நான் பார்த்தது இல்லை. நான் தாக்கல் செய்த முதல் விசாரணையில் சர்வே எண்.446/1க்கு வடபுறம் உள்ள ஓடைக்கும் வடபுறம் எனக்கு பூர்வீக பாத்தியபட்ட சொத்து உள்ளதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி 2 ஆம் பிரதிவாதியிடம் கடன் எதுவும் வாங்கினேனா என்றால் இல்லை. மேற்படி 2 ஆம் பிரதிவாதி ஆர்.எம்

காலனியில் குடியிருக்கு விபரம் தெரியுமா என்றால் தெரியும். ஆறுமுகம் என்பவர் இறந்து 6,7 வருடங்கள் இருக்கும், அவர் சீத்தப்பட்டியில் இறந்தார். எனக்கும் 2 ஆம் பிரதிவாதிக்கும் பழக்கம் இருப்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி வாதி தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்கிறேன் என்றால்.

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.06.20 16:02:11 +0530

Additional District Judge(FAC),

Dindigul.